සුබසාධක ප්‍රතිලාභ මණ්ඩලය
நலன்புரி நன்மைகள் சபை
WELFARE BENEFITS BOARD

சமூகப் பாதுகாப்புத் திட்டம்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

வெற்றிடங்கள்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சின் அமைச்சகத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள நலன்புரி நன்மைகள் சபையின் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் நிலவும் பின்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியான மற்றும் அனுபவம் வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கொழும்பிலுள்ள திட்ட முகாமைத்துவக் குழுவிற்காக (PMT) மட்டுமே பதவிகள் நிரப்பப்படும் என்பதைத் கவனத்திற்கொள்ளவும்.

இல.	பதவி	வெற்றிடங்களின் எண்ணிக்கை	தகைமைகள்
01	பெறுகை அதிகாரி சம்பளக் குறியீடு: வகை **F** (02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபத்தின் பிரகாரம்)	01	(பின்வரும் விருப்பத் தெரிவு 1 அல்லது 2 அல்லது 3) விருப்பத் தெரிவு 1 தொடர்புடைய துறையில் பட்டமொன்றிற்குச் சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஒரு இளமாணிப் பட்டம் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப/தொழிற்கல்வி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வி தகைமை (NVQ) 7ஆம் மட்டத்திற்குக் குறையாத ஒரு தேர்ச்சிச் சான்றிதழ் மற்றும் தேவைப்படும் விசேடத்துவப் பரப்பில் குறைந்தபட்சம் 02 வருடகால அனுபவம் விருப்பத்தெரிவு 2 மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப/தொழிற்கல்வி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வி தகைமை (NVQ) 6ஆம் மட்டத்திற்குக் குறையாத ஒரு தேர்ச்சிச் சான்றிதழ் மற்றும் தேவைப்படும் விசேடத்துவப் பரப்பில் குறைந்தபட்சம் 05 வருடகால அனுபவம் விருப்பத்தெரிவு 3 மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப/தொழிற்கல்வி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வி தகைமை (NVQ) 5ஆம் மட்டத்திற்குக் குறையாத ஒரு தேர்ச்சிச் சான்றிதழ் மற்றும் தேவைப்படும் விசேடத்துவப் பரப்பில் குறைந்தபட்சம் 08 வருடகால அனுபவம்
02	திட்ட அதிகாரி (நிதி/ கணக்கிடல்) சம்பளக் குறியீடு: வகை **F** (02/2026 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபத்தின் பிரகாரம்)	01	(பின்வரும் விருப்பத் தெரிவு 1 அல்லது 2 அல்லது 3) விருப்பத் தெரிவு 1 தொடர்புடைய துறையில் பட்டமொன்றிற்குச் சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஒரு இளமாணிப் பட்டம் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப/தொழிற்கல்வி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வி தகைமை (NVQ) 7ஆம் மட்டத்திற்குக் குறையாத ஒரு தேர்ச்சிச் சான்றிதழ் மற்றும் தேவைப்படும் விசேடத்துவப் பரப்பில் குறைந்தபட்சம் 02 வருடகால அனுபவம் விருப்பத்தெரிவு 2 மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப/தொழிற்கல்வி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வி தகைமை (NVQ) 6ஆம் மட்டத்திற்குக் குறையாத ஒரு தேர்ச்சிச் சான்றிதழ் மற்றும் தேவைப்படும் விசேடத்துவப் பரப்பில் குறைந்தபட்சம் 05 வருடகால அனுபவம் விருப்பத்தெரிவு 3 மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப/தொழிற்கல்வி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வி தகைமை (NVQ) 5ஆம் மட்டத்திற்குக் குறையாத ஒரு தேர்ச்சிச் சான்றிதழ் மற்றும் தேவைப்படும் விசேடத்துவப் பரப்பில் குறைந்தபட்சம் 08 வருடகால அனுபவம்

குறிப்பு: தகுதிகள் மற்றும் உத்தேச குறிப்பு விதிமுறைகள் (TORs) பின்வரும் இணையத்தளங்களில் உள்ளன.

https://www.treasury.gov.lk/web/ministry-of-finance-vacancies/section/current%20vacancies

https://www.wbb.gov.lk

தெரிவு செய்யும் முறை:

தகுதிகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் தகுதியான விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.

ஆட்சேர்ப்பு அடிப்படை

வெளிவாரி விண்ணப்பதாரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டதால் அவர் சம்பந்தப்பட்ட பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்படுவார். அரச ஊழியர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் இடமாற்று (Secondment) அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

மாதாந்த சம்பளம்:

வகை F - ரூ. 150,000/- + அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

நிபந்தனைகள் மற்றும் விதிகள்

நியமனங்கள் ஆரம்பத்தில் 2027 செப்டம்பர் 30ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு வழங்கப்படும் என்பதுடன் திட்டக் கால எல்லையின் நீடிப்பு மற்றும் அதிகாரியின் திருப்திகரமான செயல்திறன் ஆகியவற்றிற்கு உட்பட்டுப் புதுப்பிக்கப்படலாம். 02/2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் மற்றும் அதற்குப் பின்னரான சுற்றுநிருபத்தில் உள்ள அனைத்து நிபந்தனைகளும் இந்நியமனங்களுக்குப் பொருந்தும்.

மேற்கண்ட வெற்றிடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளில் 64 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தைப் பின்வரும் இணையத்தளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்:

https://www.treasury.gov.lk/web/ministry-of-finance-vacancies/section/current%20vacancies

https://www.wbb.gov.lk

தரப்பட்ட வடிவத்திலான விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அல்லது நேரில் கையளித்தல் அல்லது dpd.spp.wbb@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாக திட்டப் பணிப்பாளர், சமூகப் பாதுகாப்புத் திட்டம், நலன்புரி நன்மைகள் சபை, ஜே.ஆர். ஜயவர்தன நிலையம், இல. 191, தர்மபால மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு 2026 டிசம்பர் 03ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சென்றடையுமாறு அனுப்ப வேண்டும். அரச / கூட்டுத்தாபன துறை நிறுவனங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைமையின் ஊடாக அனுப்ப வேண்டும். முழுமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் இறுதி நாளுக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பிக்கப்படும் பதவியின் பெயரை கடித உறையின் இடது மேல் மூலையில் எழுத வேண்டும் அல்லது மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்கும்போது விடய வரிசையில் (Subject line) குறிப்பிட வேண்டும். இந்த விளம்பரத்தை இரத்து செய்வதற்கு, மாற்றுவதற்கு அல்லது திருத்துவதற்கு அல்லது விண்ணப்பதாரர்களை குறும்பட்டியலிடும் உரிமையை நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

தலைவர் / ஆணையாளர் / திட்டப் பணிப்பாளர்
சமூகப் பாதுகாப்புத் திட்டம்,
நலன்புரி நன்மைகள் சபை,
ஜே.ஆர். ஜயவர்தன நிலையம்,
இல. 191, தர்மபால மாவத்தை,
கொழும்பு 07.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED